# படித்ததில் பிடித்தது…💛 – The life of Mine

thelifeofmine3.wordpress.com/2024/02/16/poem/

February 16, 2024

அன்பு கிடைக்காத நிலையும் ஒரு ஊனம் தான்…
-Manushiyaputhirar

**Mauerbauertraurigkeit**
The inexplicable urge to push people away. even close friends or people you like

**Retrouvaille**
The joy of meeting or finding someone again after a long separation. reunion, rediscovery.

புகைப்படத்தில் உன் அரை முகம் தெரிந்தாலும், அதையும் ரசிக்கிறேன்..! பிறை என்றாலும், நீ நிலவல்லவா…

-Unknown



பச்சை கிளிக்கு கோவைப்பழம் பிடிக்கும் என..
தேடி அலைந்து வாங்கி கொடுப்பவர்களுக்கு ..
கூண்டு பிடிக்காது என்பது ஏன் தெரியாமல் போனது..?

-Unknown

என் வலிகளை பற்றி கேட்காதீர்கள் அதை பற்றி சொல்லி உங்கள் கருணையை நான் பெற விரும்பவில்லை என் காயத்தின் வலிகளை உங்கள் கருணையால் ஒரு போதும் கரைத்து விட முடியாது

-Unknown

நீயும் புகைப்படமும்
எத்தனை புகைப்படம் எடுத்தாலும், அனைத்திலும் ஏதோ ஒரு குறை இருந்து கொண்டேதான் இருக்கிறது…
எனது அருகில் நீ வந்தவுடன் நிரம்பிவிடும்…

-Unknown

யாராவது வந்து
என்னை ஒரு முறை கட்டி அணைத்துவிட்டு செல்லுங்களேன்! இந்த சமூகமெனும் இருள் நிறைந்த அடர் வனத்தில் என் சொற்கள் ஏந்தி போர் செய்து கொண்டிருக்கிறேன் வாருங்களேன்!

-Unknown

கலங்கிய விழிகளோடு... கனத்த இதயத்தோடு... என்னோடு இரு என்று சொல்லமுடியாமல்...
கைத்தொடும் தூரத்தில் இருந்தும் கூட பிடித்து வைக்க தெரியாமல் பிரிந்து போன என் உயிர் நீ...
கள்ளிக்காட்டு கவிதைகள்

-Unknown

இந்த வாழ்வு இன்னும் சலிக்காமல் இருக்க
ஒரே ஒரு காரணம்தான் இருக்கமுடியும்
யாரேனும் ஒருவரை
நீங்கள் நேசித்துக் நப்பதும்
யாரேனும் ஒருவர்
உங்களை நேசித்துக்கொண்டிருப்பதும் தான்!

-Unknown

மனிதர்களைக் காணும்போதும்
இப்போதெல்லாம் புதிதாக எந்த இடத்திற்குப்போனாலும் இந்த இடத்தைக் காண்பது
இதுதான் வாழ்வில் கடைசி என்று தோன்றிவிடுகிறது
கொஞ்ச நாளில் மனிதர்களைக் காணும்போதும் இப்படித் தோன்ற ஆரம்பித்துவிடும்

-Unknown



நிம்மதியற்ற என் இரவுகளை ஓர் இரவில் நிறைவாக்கியவனே.. இரத்த பந்தம் இல்லாமல் சொந்த பந்தம் இல்லாமல் எதிர்பார்ப்புகள் இல்லாமல் அன்பை மட்டும் கொட்டி தீர்த்துவிட்டாய் கண்ணீர் என் கண்களில் என் புன்னகை உன் உதடுகளில் போய் வா அன்பே. மீண்டும் சந்திபோம் இறைவனுக்கு என் மேல் இரக்கம் இருந்தால். அடுத்த ஜென்மத்தில்
-காரிகையின் தேடல்

ஆண் என்றாலே அப்படித் தான் என்பதற்கு மாறானவன் அவன் முரடனா? அதான் இல்லை முழு மதியானாலும் அரை மதியானாலும் அழகென ரசிக்க தெரிந்தவன். கோவக்காரனா? அதான் இல்லை குழந்தையை போல கொஞ்சத் தெரிந்தவன். தப்பானவனா? அதான் இல்லை தப்பெனில் தயங்காமல் தட்டி கேட்பவன். அலட்சியக்காரனா? அதான் இல்லை ஆதரவற்றோரையும் அரவணைக்க தெரிந்தவன். பொறுப்பற்றவனா? அதான் இல்லை கடமையை செய்யும் கன்னியமானவன். சிடுசிடுக்காரனா? அதான் இல்லை சிரித்தே மயக்கும் மாயக்காரன். காமக்காரனா? அதான் இல்லை என் காதோரம் உரசும் கம்மலை காதல் செய்பவன். உணர்வுகளற்றவனா? அதான் இல்லை உயிரானவரின் மௌனத்திற்கே உடைந்து விடுபவன்.
ஏமாற்றுபவனா? அதான் இல்லை
உண்மையாய் இருந்து ஏமாறப்பட்டவன்.
ஆமாம் ஆண் என்றாலே இப்படி தான் என்பதற்கு மாறான அன்பாளன் அவன்.

-Unknown

பக்கத்து வீட்டில் இருந்திருந்தால், பாலியக் காதலாய் பிறந்திருக்கும் ! பள்ளியில் ஒன்றாய் படித்திருந்தாள், பதின்ம காதலாய் துளிர்த்திருக்கும்!
கல்லூரியில் உன்னுடன் பழகியிருந்தால், அன்றே காதல் கனிந்திருக்கும் ! என் மாமன் மகளாய் பிறந்திருந்தாள், என்றோ காதல் மலர்ந்திருக்கும் !
இப்போது உந்தன் காதல் மழையில், நித்தமும் நிறைவுற்று நனையும் எனக்கு, உன் வரவிற்கு முன்பிருந்த வாழ்வு, சற்று வருத்தத்திற்குறியதாக தோன்றுவதேனோ?
இன்னும் கொஞ்சம் முன்னதாகவே உன்னை பார்த்திருக்கலாம் என்ற ஏக்கம்! அந்த குறுகிய காலத்தில் கூட என்னுடன் நீ இருந்திருக்க வேண்டுமென்ற தாகம் !
நான் உன்னவனாகியத் தருணத்தில், உன்னிடம் உதிர்க்க நினைத்த கேள்வி, உதிரத்தில் உறைந்த உயிருணர்வே, இத்தனை நாளாய் எங்கிருந்தாய்?

-Unknown